வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 29.11.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

புவனேஸ்வரில் இன்று தொடங்கி உள்ள, அகில இந்திய காவல்துறை தலைவர்கள் மாநாட்டில், நாளை முதல், பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்து கொள்கிறார்.

எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, நாடாளுமன்ற இரு அவைகளிலும், இன்று 4-ஆவது நாளாகவும், அலுவல்கள் பாதிக்கப்பட்டன.

பிரான்ஸ் நாட்டின் வெளிவர்த்தக மற்றும் வெளிநாடு வாழ் பிரஞ்ச் குடிமக்கள் துறை அமைச்சர் திருமதி சோஃபி ப்ரைமா, இன்று புதுச்சேரியில் துணை நிலை ஆளுநரை மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

வங்க கடலில் உருவாகி உள்ள ஃபெஞ்சல் புயல் நாளை பிற்பகல், புதுச்சேரி-மகாபலிபுரம் இடையே கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

காவல்துறை மாநாடு

புவனேஸ்வரில் இன்று தொடங்கி உள்ள, அகில இந்திய காவல்துறை தலைவர்கள் மாநாட்டில், நாளை முதல், பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்து கொள்கிறார். இந்த 3 நாள் மாநாட்டை, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று தொடக்கி வைத்தார். அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் காவல்துறை தலைவர்களுடன், தேசிய பாதுகாப்பு ஆலோசகர், மத்திய உள்துறை செயலர் உள்ளிட்ட மூத்த அதிகாரிகளும், சிஆர்பிஎப், புலனாய்வு பிரிவு பிரிவு உள்ளிட்ட அமைப்புகளின் தலைவர்களும், இம்மாநாட்டில் பங்கேற்றுள்ளனர். உள்நாட்டு பாதுகாப்பு, கடலோரப் பாதுகாப்பு,புதிய பாதுகாப்பு,புதிய கிரிமினல் சட்டங்கள், மாவோயிஸ்ட் பிரச்சனை, மற்றும் சைபர் குற்றங்கள் குறித்தும், செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட உள்ளிட்ட நவீன தொழில் நுட்பங்களால் ஏற்படும் புதிய சவால்கள் குறித்தும், இந்த 3 நாள் மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்படுகிறது.

தீவிரவாதத்தை எதிர்ப்பதற்கான உத்திகள் குறித்தும் மாநாட்டில் விவாதங்கள் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. காவல்துறை தலைவர்களின் மாநாட்டில் பிரதமர் எப்போதுமே ஆழ்ந்த ஆர்வம் காட்டி காட்டி வருவதாகவும், வெளிப்படையான திறந்த நிலை விவாதங்களை அவர் ஊக்குவித்து வருவதாகவும் பிரதமர் அலுவலகம் செய்திக் குறிப்பு குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. இம்மாநாட்டின் போது, காவல்துறையில் சிறப்பாக பணிபுரிந்தவர்களுக்கான குடியரசு தலைவரின் தலைவரின் போலீஸ் பதக்கங்களும் வழங்கப்பட உள்ளன.

நாட்டில் பெரும் எண்ணிக்கையிலான மக்களின் வாழ்க்கையை வளப்படுத்தும் உள்ளாற்றல், சுற்றுலாத் துறைக்கு இருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். முக்கிய சுற்றுலா மையங்களை மேம்படுத்துவதற்கான 40 திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்திருப்பது குறித்து, மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள பதிவை பிரதமர் பகிர்ந்து கொண்டு, இவ்வாறு தெரிவித்துள்ளார். நாட்டில் சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் அரசு தொடர்ந்து கவனம் செலுத்தும் என்றும், இதனால் இந்தியாவின் அற்புத சுற்றுலா தலங்களை கண்டு களிக்கும் வாய்ப்பு மேலும் பலருக்கு கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

*நாடாளுமன்றம்*

தனியார் தொழில் குழுமம் ஒன்றுக்கு எதிரான லஞ்ச ஊழல் புகார்கள் புகார்கள் மற்றும் இதர பிரச்சனைகள் தொடர்பாக எதிர்கட்சிகள் ஏற்படுத்திய அமளி காரணமாக, நாடாளுமன்ற இரு அவைகளிலும் இன்று 4-ஆவது நாளாகவும், அலுவல்கள் பாதிக்கப்பட்டன. மாநிலங்களவையில் அலுவல்கள் நாள் முழுவதற்கும், மக்களவையில் நண்பகல் 12 மணி வரையிலும், ஒத்தி வைக்கப்பட்டன. நாடாளுமன்ற அலுவல்கள் எதிர்கட்சிகளால் தடைபடுவது குறித்து, மக்கள் பலரும் கவலை வெளியிட்டுள்ளதாக மக்களவையில் சபாநாயகர் திரு ஓம் பிர்லா கூறினார். அவையின் அலுவல்களை தடை படுத்துவதற்கான ஆயுதமாக. ஆயுதமாக. 267-ஆவது விதியை எதிர்கட்சிகள் பயன்படுத்துவதாக மாநிலங்களவையில் அவைத் தலைவர் திரு ஜெகதீப் தன்கர் கூறினார். மத்திய அமைச்சர் திரு கிருஷண் பால் குர்ஜார், நாடாளுமன்றத்திற்கு

வெளியே செய்தியாளர்களிடம் பேசுகையில் எதிர்கட்சிகள் நாடாளுமன்ற நாடாளுமன்ற விவாதங்களில் இருந்து தப்ப முயலுவதாக குற்றம் சாட்டினார். காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் திரு கார்த்திக் சிதம்பரத்திடம் செய்தியாளர்கள் கருத்து கேட்டபோது, முக்கிய பிரச்சனைகளை நாடாளுமன்றத்தில் எழுப்ப, அரசு, எதிர்கட்சிகளுக்கு வாய்ப்பளிக்கும் என தாம் நம்புவதாக கூறினார்.

*அஷ்டலட்சுமி விழா*

8 வடகிழக்கு மாநிலங்களின் கலை-கலாச்சார மரபுகளையும் இயற்கை வளத்தையும் வெளிப்படுத்தும் வகையில் வரும் டிசம்பர் 6 முதல் 8-ஆம் தேதி வரை புதுடெல்லி பாரத் மண்டபத்தில் நடைபெற உள்ள அஷ்டலட்சுமி மகோத்சவ் விழாவினால் வடகிழக்கு மாநிலங்களுக்கும் நாட்டின் இதர பகுதிகளுக்கும் இடையிலான, கலாச்சார மற்றும் பொருளாதார இடைவெளி நீங்கும் என்று வடகிழக்கு மாநிலங்களின் மேம்பாட்டிற்கான மத்திய அமைச்சர் திரு ஜோதிராதித்யா சிந்தியா கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் வடகிழக்கு பிராந்தியத்தை நாட்டின் வளர்ச்சிக்கான உந்து சக்தியாக மேம்படுத்த வேண்டுமென்ற தொலைநோக்கு பார்வையின் ஒரு அங்கமாகவே அரசு இவ்விழாவிற்கு ஏற்பாடு செய்திருப்பதாக தெரிவித்தார். அஷ்டலட்சுமி மகோத்சவத்தின் தொடக்க விழாவில் அனைத்து 8 வடகிழக்கு மாநிலங்களின் முதலமைச்சர்களும் கலந்து கொள்வார்கள் என்று அவர் கூறினார். அஷ்டலட்சுமி விழாவிற்கான சின்னத்தையும் அமைச்சர் இந்த செய்தியாளர் கூட்டத்தின் போது வெளியிட்டார்.

*ஜவுளி*

நாட்டில் ஜவுளித் துறையில் பெண்களின் பங்கேற்பு குறிப்பிடத் தகுந்த அளவில் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய ஜவுளித் துறை அமைச்சர் அமைச்சர் திரு பபித்ரா மார்கரீட்டா தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஜவுளித் தொழில் துறையினருடன் இணைந்து, திறன் மேம்பாட்டு பயிற்சி மற்றும் வேலை வேலை வாய்ப்பு அளிப்பதற்கான மத்திய அரசின் சமர்த் திட்டத்தின் கீழ் சுமார் 6 லட்சம் பெண் பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக அளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். ஜவுளித் துறை அமைச்சகத்தின்

மொத்த பயனாளிகளின் 88 சதவிகிதம் பேர் பெண்கள் என்றும் அவர் கூறினார். சமூகத்தின் அனைத்து பிரிவினரையும் பொருளாதாரத்தின் பிரதான நீர் ஓட்டத்தில் கொண்டு வந்து அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதே அரசின் நோக்கம் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

*பிரஞ்ச் அமைச்சர்*

பிரான்ஸ் நாட்டின் வெளிவர்த்தக அமைச்சகம் சார்ந்த வெளிநாடு வாழ் பிரஞ்ச் குடிமக்கள் துறை அமைச்சர் திருமதி சோஃபி ப்ரைமா, தமது 3 நாள் இந்திய பயணத்தின் ஒரு பகுதியாக இன்று புதுச்சேரி வந்துள்ளார். புதுச்சேரி ராஜ்நிவாசில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனை அவர் மரியாதை நிமித்தம் சந்தித்தார். இந்தியாவிற்கான பிரஞ்ச் தூதர் திரு தேர்ரி மேத்தோ, பிராந்திய பொருளாதார சேவைகள் பிரிவின் தலைவர் திரு பெனோ கவுதே, சென்னை மற்றும் புதுச்சேரிக்கான பிரஞ்ச் கோன்சல் ஜென்ரல் திரு எத்தின் ரோலான் பிகே, துணை கோன்சல் ஜென்ரல் திரு ஜீன் பிலிப் ஹீத்தர் ஆகியோரும் உடன் இருந்தனர். முன்னதாக பிரஞ்ச் அமைச்சரை, துணை நிலை ஆளுநர் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். தலைமைச் செயலர் திரு ஷரத் சவ்கான், துணை நிலை ஆளுநரின் செயலர் திரு நெடுஞ்செழியன் ஆகியோரும் உடன் இருந்தனர். தொடர்ந்து பிரஞ்ச் அமைச்சர் திருமதி சோஃபி ப்ரைமா தலைமையிலான குழுவினர் புதுச்சேரி கடற்கரை சாலையில் உள்ள போர் நினைவு சின்னத்தை பார்வையிட்டனர். ஒயிட் டவுன் பகுதியில் உள்ள தேவாலயம் மற்றும் பாரம்பரியக் கட்டிடங்களையும் இவர்கள் பார்வையிட்டனர். தொடர்ந்து அலையன்ஸ் பிரான்சே பள்ளிக்கு இவர்கள் நேரில் சென்று அங்குள்ள கல்வி முறை குறித்து கேட்டறிந்தனர்.

*லட்சுமி நாராயணன்*

புதுச்சேரியில், இந்திய தொழில்கள் கூட்டமைப்பு சார்பில் ஏற்பாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, Ind-Ex என்னும் தொழில் துறை கண்காட்சியை, அமைச்சர் திரு லட்சுமி நாராயணன் இன்று தொடக்கி வைத்தார். புதுச்சேரியில் தொழில் புரிவதை எளிமையாக்குவதற்கான மாநில அரசின் மசோதா மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். மாநில அரசு, மத்திய அரசிடம்

பேசியதைத் தொடர்ந்து, புதுச்சேரியில் தொழில் தொடங்க தொழில் முனைவோருக்கு மொத்தம் 21 ஆயிரம் கோடி ரூபாய் வங்கி கடன் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார். சிறு ஐ டி நிறுவனங்களுக்கு புதுச்சேரியில் அரசே நிலம் வழங்க திட்டமிடப் பட்டுள்ளதாகவும் அவர் அவர் தெரிவித்தார். ராஜீவ்காந்தி சிலையில் இருந்து மரப்பாலம் சந்திப்பு சந்திப்பு வரை மேம்பாலம் அமைக்கும் திட்டத்திற்கான வரைபடத்தில் மாற்றம் செய்து மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் இப்பணிகள் இப்பணிகள் விரைவில் தொடங்கும் என்றும் அமைச்சர் கூறினார். தொழில் துறை இயக்குநர் திரு ருத்ரே கவுடு, சிஐஐ புதுச்சேரி பிரிவின் பிரிவின் தலைவர் திரு சண்முகநாதன் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*பல்கலைக் கழகம்*

நிலையான வளர்ச்சிக்கான ஐ நா இலக்குகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புதுச்சேரி பல்கலைக் கழக வளாகத்தில் 3 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள SDG Selfe Standee வசதியை, பொறுப்பு துணை வேந்தர் திரு தரணிக்கரசு திறந்து வைத்தார். நிலையான வளர்ச்சி இலக்குகள் பற்றிய சிறு நூல் ஒன்றையும் அவர் வெளியிட்டு உரையாற்றினார். நிலையான வளர்ச்சி இலக்குகள், பல்கலைக் கழகத்தின் பாடத் திட்டத்திலும், ஆராய்ச்சி மற்றும் இதர செயல்பாடுகளிலும் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதை அவர் எடுத்துக் கூறினார். புதுப்பிக்க வல்ல எரிசக்தி, மீன்வளப் பாதுகாப்பு, கழிவு மேலாண்மை, பசுமை உள்கட்டமைப்பு போன்ற தொடர்ச்சியான முயற்சிகளை அவர் வலியுறுத்தினார். பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*புயல்*

வங்க கடலில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று இன்று புயலாக வலுப் பெற்றுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஃபெஞ்சல் புயல் எனப் பெயரிடப்பட்டுள்ள இந்தப் புயல் நாகப் பட்டினத்தில் இருந்து 260 கிமீ, புதுச்சேரியில் இருந்து இருந்து 270 கிமீ, மற்றும் சென்னையில் இருந்து 300 கிமீ தொலைவில் தொலைவில் மையம் கொண்டுள்ளதாகவும் நாளை இதுவடமேற்கு

திசையில் தொடர்ந்து நகர்ந்து நாளை பிற்பகல் வாக்கில் புதுச்சேரிக்கும் புதுச்சேரிக்கும் மகாபலிபுரத்திற்கும் இடையே கரையை கடக்க கூடும் கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. புயல் கரையை கடக்கும் போது போது மணிக்கு 60 முதல் 70 கிமீ வேகத்திலும், அதிகபட்சமாக 90 கிமீ வேகத்திலும் காற்று வீசக் கூடும் என்றும் கடல் கொந்தளிப்பாக காணப்படும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றைய தினம் திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், திருச்சி திருச்சி உள்ளிட்ட ஓரிரு இடங்களில் கனமழைக்கும், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மிக கன மழைக்கும், செங்கல்பட்டு, விழுப்புரம், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டிணம் மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் அதி கனமழைக்கும் வாய்ப்பு இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி-புதுச்சேரி-கடலூர் துறைமுகங்களில் 7-ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டும், நாகப்பட்டிணம் காரைக்கால் துறைமுகங்களில் 5-ஆம் எண் புயல் எச்சரிக்கை கூண்டும் ஏற்றப்பட்டுள்ளது. மீனவர்கள் கடலுக்குள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஏற்கனவே ஆழ்கடலுக்குள் சென்ற மீனவர்கள் உடனடியாக கரை திரும்பவும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

*பட்டபடிப்பு*

3 அல்லது 4 ஆண்டுகால பட்டப்படிப்பை அதை விட குறைந்த காலத்திலோ அல்லது அதிகக் காலத்திலோ, தங்கள் விருப்பப்படி முடிக்கும் வாய்ப்பை மாணவர்களுக்கு வழங்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள, நிலையான செயல்பாட்டு நடைமுறைகளுக்கு, பல்கலைக்கழக மானியக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. ஒவ்வொரு பருவத்திலும் நிர்ணயிக்கப்பட்டதை விட அதிகமாக கிரெடிட் ஈட்டுவதன் மூலம் மாணவர்கள் பட்டப்படிப்பை குறைந்த காலத்திலும், குறைவாக கிரெடிட் ஈட்டுவதன் மூலம் அதிக காலத்திலும் முடிக்கலாம் என்று யூஜிசி தெரிவித்துள்ளது. இவ்வாறு குறைந்த காலத்திலோ அல்லது அதிக காலத்திலோ முடிக்கப் பெறும் பட்டங்கள், மேல் படிப்பு மற்றும் வேலை வாய்ப்பிற்கான தகுதிகளில், வழக்கமான பட்டங்களுக்கு நிகராக கருதப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

*ராஜேந்திர பிரசாத்*

மாநிலங்களைவைத் துணைத் தலைவர் திரு ஹரிவன்ஷ் இன்று புதுடெல்லி ஆகாஷ்வாணி வளாகத்தில் உள்ள ரங்க பவன் கலையரங்கில், ஆகாஷ்வாணியின் வருடாந்திர, **டாக்டர் ராஜேந்திர பிரசாத் நினைவு சொற்பொழிவு** ஆற்றினார். பிரசார் பாரதி தலைமை செயல் அதிகாரி திரு கவுரவ் துவிவேதி, ஆகாஷ்வாணி தலைமை இயக்குநர் திருமதி பிராக்யா பாலிவால் கவுர் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். ஆண்டு தோறும் முன்னாள் குடியரசு டாக்டர் ராஜேந்திர பிரசாத் பிறந்த நாளான டிசம்பர் 3-ஆம் தேதி, நினைவு சொற்பொழிவின் ஒலிப்பதிவு, ஒலிபரப்பப் படுகிறது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

புவனேஸ்வரில் இன்று தொடங்கி உள்ள, அகில இந்திய காவல்துறை தலைவர்கள் மாநாட்டில், நாளை முதல், பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்து கொள்கிறார்.

எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, நாடாளுமன்ற இரு அவைகளிலும், இன்று 4-ஆவது நாளாகவும், அலுவல்கள் பாதிக்கப்பட்டன.

பிரான்ஸ் நாட்டின் வெளிவர்த்தக மற்றும் வெளிநாடு வாழ் பிரஞ்ச் குடிமக்கள் துறை அமைச்சர் திருமதி சோஃபி ப்ரைமா, இன்று புதுச்சேரியில் துணை நிலை ஆளுநரை மரியாதை நிமித்தம் சந்தித்தார்.

வங்க கடலில் உருவாகி உள்ள ஃபெஞ்சல் புயல் நாளை பிற்பகல், புதுச்சேரி-மகாபலிபுரம் இடையே கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---------------------------------